உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

அருணைத் திருத்தொண்டர் ஆனந்தக்களிப்பு.

இஃது
பெங்களூர் தண்டு ம-ா-ா-ஸ்ரீ, இராவ்பஹதூர்,
ஸ்ரீமான் விவேகவிபாகரன் ஆ. மெய்கண்
தேவ முதலியார்
விருப்பத்தின்படி

காஞ்சிபுரம் ஸ்ரீ குமரகோட்
சோணசலபார
இயற்றியது.

"திருப்பத்தூர் சின்னைய நாடார் அச்சுயந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது."
1906.

உ

திருச்சிற்றம்பலம்.

அருணைத்திருத்தொண்டர்

ஆனந்தக்களிப்பு.

கணபதி துதி.

கருணைமா மலையாய்ஞானக் காட்சிதந் தருளுமீச
ரருணைவாழ் நாயன்மார்க ளானந்தக் களிப்பையோதத்
தருணையுண்ணு மூலத்தாய் தந்தசெங்கழுநீர் வேழம்
பொருணையாதளித்து நம்மைப் புரந்தருள் புரியுமன்றே.

ஆனந்த மானந்த மனமே—திரு
வருணேசர் திருத்தொண்டர்க் கன்புசெய் தினமே.

1. ஞானந்தழைத்தொளிர் தேயம்—இந்த
நாவலந்தீவினில் நாயன்மார் நேயம்
ஆனதேமுத்தி யுபாயம்—என்றே
யண்ணுமலைநாதர் பண்ணுஞ் சகாயம் (ஆனந்தம்)

2. சுந்தர மூர்த்தியார் சீர்த்தி—வன்
றொண்டாய்ப் பித்தாபிறை சூடியென் றேத்தி
யந்தரர் மாலயன் வாழ்த்தி—நிற்ப
ஆனைமேற் கயிலாய மடைந்ததே கீர்த்தி (ஆனந்தம்)

3. தில்லைவா ழந்தணர் மாட்சி—என்றற்
செப்பத் தரமோ சிதம்பரக் காட்சி
செல்வ நடராசு ராட்சி—யருட்
டிருத்தொண்டத் தொகைமுதற் றிருவாக்கே சாட்சி (ஆனந்தம்)

4. திருநீல கண்டர்க்கு மற்றார்—நிகர்
தேவி சொல்லாற்காமச் சிந்தனை யற்றார்
திருகற் றடிபற்றி யுற்றார்—உண்மை
தெரிவித்துக் குளமூழ்கித் திருவருள் பெற்றார் (ஆனந்தம்)

5. இயற்பகை நாயனார் நீரம்—உலகில்
யார்க்கு வருமீசர்க் கினியதந் தாரம்
நயத்துதவி லெகு தூரம்—துணை
நல்கியோலந்தீர்த்து நலம்பெற்ற சாரம் (ஆனந்தம்)

6. இளசைக் குடிமாறர் போலே—யன்பர்க்
கினிய பூசைசெய்தோ ரேவர்மண் மேலே
முளைவாரி யனமிட்ட தாலே—பெற்றார்
மோனர்க்குங்கிட்டாத ஞானச்செங் கோலே (ஆனந்தம்)

7. மெய்ப்பொரு ளயனார் தண்மை—யென்ன
விதமென்பேன் பகைவன்பொய் வேடத்தாற் றிண்மை
கைப்பொருளாச் செய்தும் வண்மை—செய்து
காட்சிகண்டீசர் கழல்சேர்ந்தா ருண்மை (ஆனந்தம்)

8. விறன்மிண்ட ரெனுமதி காரர்—ஆரூர்
மெய்த்திருக் கூட்டம் விரும்பாவா ரூரர்
புறகென்றுரை ஞானச் சூரர்—அரனும்
புறம்பென்றுசொல்லும் புகழ்சேர்கெம் பீரர் (ஆனந்தம்)

9. அமர்நீதி யார்தந் நிதானம்—எண்ணின்
யார்க்குண்டையர் வேதமான கௌ பீனம்
சமமாத் தாமேறும்வி மானம்—துலைத்
தட்டாச்சிவபதங் கிட்டுமெய்ஞ் ஞானம் (ஆனந்தம்)

10. எறிபத்தர் சிவகாமி யாண்டார்—மலரை
யானை சிந்தியதென வேங்கப்போய் மூண்டார்
மறிந்தியானையொடும் பாகர் மாண்டார்—சோழர்
மனங்கண்டு மகிழ்கொண்டு வான்வாக்கின் மீண்டார் (ஆனந்தம்)

11. ஏனாதியார் வர லாறு—என்னே
எதிராளி முண்டத்திலிட்ட வெண் ணீறு
ஆனமை கண்டமர் வீறு—விட்டே
ஆகெட்டே னடியாரென் றடைந்தாரே பேறு (ஆனந்தம்)

12. கண்ணப்பர் பத்தியே பத்தி—நிட்
காமியபூசைக் கருத்திற் கா ளத்தி
யண்ணற்குக் கண்ணப்புஞ் சத்தி—தன்னு
லாறுநாளைக்கு ளடைந்தாரே முத்தி (ஆனந்தம்)

13. குங்கிலியக் கலயனார் பெண்டே—தனை
குடும்பம் படுகின்ற கொடுமையைக் கண்டு
மங்கிலியம் தரவேநெற் கொண்டு—வர
வந்தவர் குங்கிலியம் வாங்கிச்செய் தொண்டு (ஆனந்தம்.)

14. மானக்கஞ் சாறனார் யோகம்—வந்து
மாதேவர் பஞ்சவடிக்காந் தியாகம்
தானல்குமென்னவி வாகம் தன்னிற்
றன்னொரு மகள்கூந்தல் தந்தார்வி வேகம் (ஆனந்தம்.)

ரு

15. அரிவாட்டா யனாரன்பு நீட்டி—நல்ல
வரிசிமாவடு கீரை யமுதுக்கா ஈட்டி
தருவார் தடைப்பட வூட்டி—யரியத்
தற்பரர் கமர்வரத் தரிசித்த மேட்டி (ஆனந்தம்.)

16. ஆனாயர்க்குழ லோசை கேட்டே—யீசர்
அருளஞ் செழுத்து மமையுமிப் பாட்டே
வானாய தந்திரு நாட்டே—மன்ன
வருகென் றருள்செய் மகிமைபா ராட்டே (ஆனந்தம்.)

17. மூர்த்தியார் சமணரை ... வேண்டார்—அரர்க்கு
முழங்கைச் சந்தனந்தந்து மும்மலங் கிண்டார் —
சீர்த்திரு நீற்றையே ... பூண்டார்—மதுரைத்
திருப்பதி தன்னையே விருப்புட னாண்டார் (ஆனந்தம்.)

18. முருகனார் காலைநீர்த் தோய்ந்தே—நாளும்
முப்பூவுந் தொயதேதந் தப்பாமல் வாய்ந்தே —
மருமாலை பரமர்க்கு வேய்ந்தே—பெரு
மணத்திரு மணத்தருண் மன்னினா ராய்ந்தே (ஆனந்தம்.)

19. உருத்திர பசுபதி ... வேதம்—சொல்லு
முருத்திர மந்திர முன்னிமெய்ப் போதம்
திருத்தக நடம்புரி ... பாதம்—தேடிச்
சிவபுரி நண்ணுஞ் செழுங்கதி நீதம் (ஆனந்தம்.)

20. திருநாளைப் போவார்தென் ...றில்லை—தன்னிற்
றிருநடம் புரிகின்ற சிற்சபை யெல்லை
யருமறை யோர்காண ... வொல்லை—யடைந்
தருட்சோதி மயமான பொருட்கிணை யில்லை (ஆனந்தம்.)

21. திருக்குறிப்புத் தொண்டர் பத்தர்—உடுக்கும்
சிலையி னழுக்கினைத் தீர்த்திடுஞ் சுத்தர்
பெருக்கு மழையிற்கம்பக் கத்தர்—தொடக்கின்
பிழைதீரத் தலைமோதிப் பேறுற்ற சித்தர் (ஆனந்தம்)

22. தண்டீசர் பசுமேய்த்துப் பாலை—மண்ணிச்
சைகத லிங்கத்திற் றூட்டும் வேலை
கண்டிட றுந்தாதை காலை—வெட்டக்
கண்ணுதல் சூட்டினார் கமழ்கொன்றை மாலை (ஆனந்தம்)

23. திருநாவுக் கரையருத் துங்கம்—சூலை
தீர்ந்து சமணரைச் செய்தாரே பங்கம்
பொருளாய்ந்து புகலூரி லிங்கம்—தன்னிற்
புகுந்தன ரதையெண்ணிற் பூரிக்கு மங்கம் (ஆனந்தம்)

24. குலச்சிறை நாயனார் தன்மை—கண்டு
கூறவென்றா லாமோ குண்டமண் வன்மை
தொலைத்திந்த வுலகுற்ற புன்மை—நீக்கித்
தூயவெண்ணீறு துலங்கச்செய் நன்மை (ஆனந்தம்)

25. பெருமிழலைக் குறும்பர் நீடி—யோகு
பெலத்தாற் சுந்தரமூர்த்தி பேரைக்கொண் டாடி
யருள்கூடி யவர்க்குமுன் னோடி—கயிலை
யடைந்தார் திருப்பாத மடைகுவோ நாடி (ஆனந்தம்)

26. காரைக்கா லம்மையார் பெருமை—இருமாங்
கனிபெற்றுத் தலையாலே கயிலைச்சே ரருமை
யாருக்கு வருமருள் தருமைக்—கண்ட
ரம்மையே யென்றிட வப்பாவென் றொருமை (ஆனந்தம்)

27. அப்பூதி யாராண்ட வரசு—பாத
மடைந்தவ ரறியாமு னன்பினாற் பரசு
மெய்ப்பூதி யார்பிள்ளை விரசு—பாம்பின்
விடத்தையுங் கருதாத திடத்தர்நம் சிரசு (ஆனந்தம்)

28. திருநீல நக்கனார் நீடு—பூசை
திறத்தரபேதமாஞ் சித்தர்பண் பாடு
திருவாளர்க் கிடந்தந்தன் போடு—காழிச்
செல்வர் மணங்கண்டு சேர்ந்தனர் வீடு (ஆனந்தம்)

29. நமிநந்தி யடிகணீ ரூற்றி—யாரூர்
நாதர் திருக்கோயில் நல்விளக் கேற்றி
யமணராங் காரத்தை மாற்றி—யவ்வூ
ரடங்கலுஞ் சிவகணமாக் கண்டார் போற்றி (ஆனந்தம்)

30. திருஞான சம்பந்தர் காழி—வந்து
திருநெறிய தமிழ்ச் சீரு ளாழி
பெருஞானச் சைவரீ ேழி—யுய்யப்
பெருமணத் திருமணப் பேறுற்றார் வாழி (ஆனந்தம்)

31. கலிக்காமர் பரவைபாற் றூது—நமது
கடவுளை யேவியே கடியனோ தீது
வலிச்சூலை தீர்ப்பனென் றோது—முன்னம்
வயிற்றைப் பீறியுய்ந்த மகிமைகொள் சாது (ஆனந்தம்)

32. திருமூலர் பொதுவர்தந் தேகி—நந்தி
தேவ ரருள்பெற்றார் தென்னாட்டுக் கேகி
திருவா வடுதுறைப்பி னாகி—யருளாற்
றிருமந்திர மூவாயி ரஞ்சொன்ன யோகி (ஆனந்தம்)

33. தண்டி யடிகள்கண் ணில்லார்—கரையிற்
றறிநட்டுக் குறிதொட்டுத் தடம்வெட்ட வல்லார்
கண்டிகழ் சமணராம் பொல்லார்—கண்போய்
கலங்கிடக் குளமூழ்கிக் கண்பெற்ற நல்லார் (ஆனந்தம்)

34. மூர்க்கனர் வல்லதோர் சூது—தன்னுன்
முன்னும் பொருண்முற்று நன்னயச் சாது
மார்க்கருக் கமுதிட்டுத் தீது—நீங்கி
மாநடம் புரிவாரூர் மன்னுசே ரோது (ஆனந்தம்)

35. சோமாசி மாறனர் யாகம்—செய்து
சுருதி சிவாகமஞ் சொல்லனு போகம்
தாமேவி நற்சிவ லோகம்—சேர்ந்த
தன்மையென் வன்றெண்டர் சரணுற்ற யோகம் (ஆனந்தம்)

36. சாக்கிய னர்புகழ் வடித்து—நவிலச்
சத்தி நமக்குண்டோ பத்தி தடித்து
நோக்கிச் செங்கல்லா லிடித்து—சிவ
லோகஞ் சேர்ந்தவனு போகம் பிடித்து (ஆனந்தம்)

37. சிறப்புலி நாயனுர் நீதி—யாகம்
செய் தெழுத்தஞ்சுஞ் சிரத்தையா யோதி
மறப்பி லன் பர்க்கமு தாதி—தந்து
வள்ளல்பத நீழல் வாழனு பூதி (ஆனந்தம்)

38. சிறுத்தொண்ட நாயனுர் தன்னம்—தனிச்
சீராளச் சேயைச் சிவனுர்க்கு முன்னம்
அறுத்துக் கறிசமைத் தன்னம்—இட்ட
அருமையும் பெருமையும் யாருக்குண் டின்னம் (ஆனந்தம்)

39. கழறிற்றறிவார் தாம் பூசை—செய்யும்
காலத்தி னடராஜர் கழற்சிலம் போசை
பழகுந் திறங்கொண்டு மாசை—நீங்கிப்
ப்ரவைகோ னருளாற் பதம்புக்கா ராசை (ஆனந்தம்)

40. கணநாதர் ஞானப்பா லுண்ட—காழிக்
கவுணியக் கன்றின்கழ லன்பு கொண்ட
குணநாதர் சோதி வே தண்ட—மன்னிக்
குலவு சிவகணத் தலைமைகை கண்ட (ஆனந்தம்)

41. கூற்றுவ னூர் தில்லை வாழ்ச்சி—கொண்ட
கூட்ட வந்தணர் முடிசூட்டாத சூட்சி
யாற்றும னடராஜர் காட்சி—கொடுத்
தடிசூட்டப் படியாண்டவ வரர சாட்சி (ஆனந்தம்)

42. பொய்யடி மையில்லாத புலவர்—கல்விப்
புலமைக்கு வேறென்ன பலனென்றம் பலவர்
மெய்யுணரடி பாடும் வலவர்—அவர்
வித்தகச் சங்கம் விரும்புவோர் நலவர் (ஆனந்தம்)

43. புகழ்ச்சோழர் சிவனன்பு தோய்ந்தார்—சமர்
புரிந்திறந் தோன்றலைப் புன்சடை யாய்ந்தார்
சிகைத்தலை யேந்தித்தீப் பாய்ந்தார்—அருட்
சிவபிரான் றிருவடித் திருநிழல் வாய்ந்தார் (ஆனந்தம்)

44. நரசிங்க முனையனார் பேறு—என்னை
நல்லன்பர்க் காதிரை நாளிற்பொன் னூறு
தருவர் சீலமிலராய் நீறு—சார்ந்த
தன்மையர்க் கிரட்டிப்பொன் றந்தசீர் கூறு (ஆனந்தம்)

45. அதிபத்தர் கடலினோர் மீனை—வலையி
லகப்படினுமீசர்க் காமென்று தானே
மதித்து விடுவரெம் மானை—சொர்ண
மணிமீன்ற ரவும்விட்ட வள்ளல்சீர் தேனை (ஆனந்தம்)

46. கலிக்கம்பர் தம்மிடம் வேலை—செய்து
கழிந்தவன் திருவேடங் கலந்துறக் காலைச்
சலிக்காமற் கழுவநீர் மேலை—விடாத
தையலார் கைவெட்டிச் சதிருற்ற லீலை (ஆனந்தம்)

47. கலிநீதி நாயனார் பரிந்து—தொண்டு
கடவாமற் செய்யக் கழுத்தை யரிந்து
மலியு முதிரஞ் சொரிந்து—தீபம்
வைத்தா ரடியையுள் வைப்போம் பரிந்து (ஆனந்தம்)

48. சத்தியார் பெற்றியே பெற்றி—யடியார்
தம்மை வைதிடுமூடர் தங்களைப் பற்றி
கத்தியாளு வினைக் குற்றி—யன்பு
கடவா வீரத்தொண்டு திடமாச்செய் வெற்றி (ஆனந்தம்)

49. ஐயடிகள் புகழ் சுற்றும்—கடல்
அவனியின் மீதினிற் சிவதல முற்றும்
துய்ய வொவ்வொரு வெண்பாச் சொற்றும்—வணங்கும்
தொண்ட ரவர்க்கிணை யுண்டோகாண் மற்றும் (ஆனந்தம்)

50. கணம்புல்ல நாயனார் நேமம்—நாளும்
கடவாமற் றிருவிளக் கிடுவார்பின் னேமம்
அணுகாமற் புல்லொடு ரோமம்—எரித்
தருட்சிவ லோகமடைந்தமெய்ச் சேமம் (ஆனந்தம்)

51. காரியார் கோவைப்பிர பந்தம்—பாடிக்
கற்றமூ வேந்தரைக் களிப்பித்துத் தந்தம்
சீரிய பொருளால னந்தம்—பணி
செய்தா ரவர்க்குத் திருமலை சொந்தம் (ஆனந்தம்)

52. நின்றசீர் நெடுமாறர் சூழும்—செல்வ
நீற்றொளிச் சைவ நிறைந்துல கேழும்
மன்றச்சம் பந்தர்தாள் தாழும்—மனைவி
யுயர்பாண்டி மாதேவி யோடன்பாய் வாழும் (ஆனந்தம்)

53. வாயிலா ரீசர்க்கு நெஞ்சம்—கோவில்
மறவா ஞானந்தீப மஞ்சன கஞ்சம்
ஆயன் பழுதமா வஞ்சம்—தீர
அர்ச்சித் தருள்பெற்ற ரடிகளே தஞ்சம் (ஆனந்தம்)

54. முனையடு வார்பெரும் வாகை—கண்டு
மொழிய வென்னலாமோ முக்கனி பாகை
யனையது சிவதொண்டர்க் கீகை—யுடைய
அன்பர் பரலோக மடைந்தபே ரோகை (ஆனந்தம்)

55. கழற்சிங்கர்சிவ பத்தி நோக்கை—என்ன
கழறுது மலர்மோந்த காதலி மூக்கை
தழற்செருத் துணைகொய்ய யாக்கை—யுருவித்
தரிப்பதீ தென்றுமுன் றரித்தாரே மாக்கை (ஆனந்தம்)

56. இடங்கழி யார்நெல்லம் பாரம்—திருடு
மீசரடியா ரெனக்குப்பண் டாரம்
விடுங்களென் றேயுப் சாரம்—சொல்லி
விட்டுப் பொருள்கொள்ளை விட்டவு தாரம் (ஆனந்தம்)

57. செருத்துணை யார்தொண்டே தொண்டு—செல்வத்
திருவாரூர்க் கோயிலிற் சிந்துபூக் கொண்டு
மருக்காணக் கழற்சிங்கர் பெண்டு—மோந்த
மணிமூக்கை யரிந்தனர் மகிமைபார் கண்டு (ஆனந்தம்)

58. புகழ்த்துணை யார்களி கூர்ந்தார்—ஒரு
பொர்க்காசுசேர்கொடுக்க வற்காலந் தீர்ந்தார்
அகத்துணை யாரரு ளார்ந்தார்—பொன்னுட்
டமரர்தொழப்பு நிதரடி நிழற் சேர்ந்தார் (ஆனந்தம்)

59. கோட்புலி யாரீசர்க் காக—வைத்து
கூட்டு நெலுண்ட குடும்பத்தை வேக
வாட்படை யாற்செற்று மேக—மான
மகனையு மாய்க்குமுன் வருசிவ லோக (ஆனந்தம்)

60. பத்தராய்ப் பணிவார்கள் பணியே—நல்ல
பணியென்றவர்கள்பத பதுமத்தை யணியே
இத்தரை மீதொரு பிணியே—யுனக்
கில்லையில்லையென் றன் சொல்லை நீ துணியே (ஆனந்தம்)

61. பரமனையே பாடு வாரை—நாளும்
பாடிப்பணிந்து பரவசிப் பாரை
விரவினு மவரது பேரை—ஒருக்கால்
விளம்பினும் வினைதீர்ந்து மேவுவர் சீரை (ஆனந்தம்)

62. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்—இந்தச்
செகதல வாழ்வெல்லாந் திரணமாக் கைத்தார்
தத்துவ நெறியினின் மொத்தார்—நாளுந்
தற்போத நீங்கித் தயாரசந் துய்த்தார் (ஆனந்தம்)

63. திருவாரூர் பிறந்தாரே பிறந்தார்—கயிலைச்
சிவகணமே யிங்குச் சேர்ந்து சிறந்தார்
பெரு மாயாகாரியந் துறந்தார்—வேறு
பேறுவேண்டாத மெய்ப்பேறுற்று நிறைந்தார் (ஆனந்தம்)

64 முப்போதுந் திருமேனி தீண்டு—வார்தம்
முறைமையை யென்னென்று மொழிகுவே னீண்டு
ஒப்பில்வெண் பொடிகண்டி பூண்டு—பதியை
ஓவாமற் பூசிப்போ ருபயதாள் வேண்டு (ஆனந்தம்)

65. முழுநீறு பூசிய முனிவர்—கற்ப
மூன்று விபூதியு முன்னியே மணிவர்
மழவிடை யார்தாட்கே குனிவர்—சைவ
மாதவ நெறிநின்று வாழ்த்தியுட் கனிவர் (ஆனந்தம்)

66. அப்பாலு மடிச்சார்ந்தார் மன்னும்—பெருமை
யறைய வென்னலாமோ வாரூரர் பன்னும்
ஒப்பிரெண்டத் தொகைக்கு முன்னும்—பின்னும்
ஒருமுதற் பரசிவத்து வந்தவ ரென்னும் (ஆனந்தம்)

67. பூசலா ரன்பினாற் பொன்னே—யின்றிப்
புரிந்த மனக்கோயிற் புகுகின்றே முன்னே
காசினின் கற்கோயிற் பின்னே—புகுவோம்
காடவர்கோனே யென்றீசர்சொ லென்னே (ஆனந்தம்)

68. மங்கையர்க் கரசியாந் தெய்வம்—பாண்டி
மாதேவியார் காழி வள்ளலாற் சைவம்
பொங்கச் செய்புகழ்துதி செய்வம்—இந்தப்
புவியின் வந்தசென்மம் புனிதமா வுய்வம் (ஆனந்தம்)

69. நேசனா ரன்பர்க்கு நாளும்—தாமே
நெய்கலகோவணந் துய்யவொண் கீளும்
ஆசையா யீந்துவந் தாளும்—நம
தாண்டவர் திருவடி யடைந்தனர் நீளும் (ஆனந்தம்)

70. கோச்செங்கட் சோழனார் சம்பு—கேத
சோதி சொருபமாத் தோன்றுஞ்சு யம்பு
பூச்சரண் முன்னமே நம்பு—பெரும்
புகழாலயர் திருப்பணிப் புகழைவி ளம்பு (ஆனந்தம்)

71. திருநீல கண்டயாழ்ப் பாணர்—இசைத்
தேனைச்சொக்கேச செவிகொண்டு யாணர்
தருபலகை தரக்கொண் மாணர்—ஞான
சம்பந்தர் கல்யாணந் தரிசித்த வாணர் (ஆனந்தம்)

72. சடையனார் தவமென்ன விந்தை—செய்ய
தமிழ்ப்பாட்டி னைசையாற் றனித்தூதா யெந்தை
கொடுத்த பொன்னாற்றிட்டு முந்தை—ஆரூர்க்
குளத்திற் குதித்தெடுத் தகுமானர் தந்தை (ஆனந்தம்)

73. இசைஞானி யார்புக மேவர்—கண்டு
இயம்புவர் சடையனார்க் கெழின்மனை யாவர்
அசைவிலா வருண்மொழித் தேவர்—புகழ்ந்
தருளிர் வினவியின் படைகின்றார் சீவர் (ஆனந்தம்)

சுந்தர மூர்த்தியார் வாழி—திருத்
தொண்டத்தொகையுள்ள தூயர்கள் வாழி.

74. நம்மையா ரூரனார் வாழி—யவர்
நவிலுந் தொண்டத்தொகை நாயன்மார் வாழி
நம்பியாண்டார் நம்பி வாழி—உமாபதி
நற்சிவஞ் சேக்கிழார் நாடெங்கும் வாழி.

அருணைத் திருத்தொண்டத்
ஆனந்தக்களிப்பு
முற்றுப்பெற்றது.